**தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தியிலிருந்து 2 ஆம் பந்தி வரை மாவட்ட செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் தரப்பட்டுள்ளன.

**1. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | அம்பாறை | (viii) | கல்முனை முஸ்லீம் | (xv) | பதியதலாவ |
| (ii) | அட்டாளைச்சேனை | (ix) | காரைதீவு | (xvi) | சாய்ந்தமருது |
| (iii) | அக்கரைப்பற்று | (x) | லாகுகல | (xvii) | சம்மாந்துறை |
| (iv) | தெஹியத்தகண்டிய | (xi) | மஹஓயா | (xviii) | திருக்கோவில் |
| (v) | ஆலையடிவேம்பு | (xii) | நிந்தவூர் | (xix) | கல்முனை தமிழ் |
| (vi) | தமன | (xiii) | நாவிதன்வெளி | (xx) | உஹன |
| (vii) | இறக்காமம் | (xiv) | பொத்துவில் | | |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,055.99 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 1,055.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 0.26 மில்லியன் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.02 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 654.79 | 654.77 | 0.02 | 0.00 |
| மூலதனம் | 401.20 | 400.96 | 0.24 | 0.06 |
| மொத்தம் | 1,055.99 | 1,055.73 | 0.26 | 0.03 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 05 அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களால் ரூபா 502.66 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| நிதி ஏற்பாடுகளை வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு | 5.38 | 4.91 | 0.46 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 302.95 | 240.43 | 62.52 |
| மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 150.00 | 97.57 | 52.43 |
| பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 4.14 | 3.30 | 0.22 |
| மீள்குடியேற்ற அமைச்சு | 7.08 | 6.29 | 0.78 |

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 0.74 | 0.67 | 0.07 |
| விவசாய திணைக்களம் | 32.37 | 24.15 | 8.22 |
| | --------- | ------- | --------- |
| **மொத்தம்** | **502.66** | **377.96** | **124.70** |
| | ===== | ==== | ===== |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 27001 | 55.0 | 41.4 | 30.0 | 34.5 | 183.0 | 151.6 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 30,325,935 ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டு கணக்கும் இணக்க கூற்றும்

தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம்

---

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணாதிருத்தல்

---

மாவட்ட செயலகத்தினால் கீழே தரப்பட்டுள்ள பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ஆ) பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 (1) |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

---

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அக்கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,029,682 ஆகும்.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,740,481 கூட்டு மொத்தமான 140 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 124,702,421 தொகையான நிதி ஏற்பாட்டில் உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாது அந்நிதி ஏற்பாடு

செலவாக கணக்கீடு செய்யப்பட்டு வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) பதியதலாவ பிரதேச செயலகத்திற்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பல்வேறு அமைச்சுக்களால் வழங்கப்பட்ட ரூபா 81,754 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 20 ஆந் திகதி வரை உரிய செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தாது செலவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டு வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

27001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது அத்திகதியில் அறவீடு நிலுவை மீதிகள் ரூபா 1,008,256 கூட்டுமொத்தமாக இருந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 1 ஆண்டிலிருந்து 8 ஆண்டுகள் வரையான கால வீச்சுடையதாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தின் நுரைச்சோலை வீடமைப்புத் திட்டத்திற்குரிய காணியின் (King Abdulla Model Town) நிர்மாண நடவடிக்கைகளுக்காகப் பொருத்துவதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மின் உபகரணங்களும் குளியலறைப் பொருட்களும் பொருத்தப்படாது 04 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டில் அனுராதபுரம் ஒயாமடுவ தேசத்திற்கு மகுடம் காணியில் அகற்றப்பட்ட மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட பயன்படுத்தப்படக் கூடிய நிலையில் உள்ள 13 குளிரூட்டி இயந்திரங்கள் கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 09 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) மாவட்ட செயலகத்தினால் 2014 யூலை, ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்ட நீர்த்தாங்கிகளில் ரூபா 2,110,250 பெறுமதியான 219 நீர்த்தாங்கிகள் வழங்கப்படாது அலுவலக வளவிலும் வெளியேயுள்ள களஞ்சியத்திலும் காணப்பட்டன.

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தினால் நீண்ட காலமாக 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு அல்லது உத்தியோகத்தர்கள் அல்லாத ஏனைய தரப்பினர்களுக்கு பணம் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்தன.

## 3.6 இணக்கமின்மை

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** |
| --- | --- | --- |
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 138 | 1,204,359 | கல்முனை பிரதேச செயலகத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒருவரினால் செலவு சான்றுபடுத்தப் படாது 10 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மூலம் ரூபா 1,204,359 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | 1,682,215 | பதியதலாவ பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்படாதிருந்த சேவைகளுக்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,682,215 கூட்டு மொத்தப் பெறுமதியான 05 காசோலைகள் எழுதி கையில் வைத்திருக்கப்பட்டன. |

**(ஆ) ஒப்பந்தங்கள் தொடர்பாக வரி அறவிடுதல்**

-----------------------------------------------------------------------

மாவட்ட செயலகம் மற்றும் தமன பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தங்களுக்காக கொடுப்பனவுகள் செய்யும் போது பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதிவுசெய்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிற்காக அப்பதிவுகள் செயற்பாடற்றிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு முறையே ரூபா 383,634 மற்றும் ரூபா 134,399 தொகைகள் பெறுமதி சேர் வரியாக (VAT) செலுத்தப்பட்டிருந்தன. இவ்வொப்பந்தக்காரர்கள் பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பாக செயற்பாடற்ற பதிவாளர்கள் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2014 நவம்பர் 11 ஆந் திகதி கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அப்பணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

-----------------------------------------------------------------------------------

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண எழுச்சி செயற்திட்டங்களின் கீழ் காரைதீவு பிரதேச செயலகத்தினால் விவசாய மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்கு ரூபா 2,511,231 பெறுமதியான 567 உபகரணங்கள் 2014 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 மே 28 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்முனை அல்-மதீனா வித்தியாலயத்திற்கு கணனி ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக கல்முனை பிரதேச செயலகத்திற்கு ரூபா 1,990,752 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2014 பெப்ரவரி 25 ஆந் திகதி ரூபா 357,866 தொகையான மேலதிக நிதியும் வழங்கப்பட்டிருந்தது. உரிய நிர்மாண ஒப்பந்தம் கல்முனை அல்-மதீனா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிர்மாணங்கள் 2013 திசெம்பர் 15 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் உடன்படிக்கை காலம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2014 நவம்பர் 10 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரை அந்நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. உரிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு இவ்வாறான நிர்மாணங்களை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவு இல்லை என பாடசாலையின் அதிபரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்யும் போது போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.8 செயலாற்றல்

---------------------

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் 2014 யூலை 18 ஆந் திகதிய PCC/2/2/1/அம்பாறை இலக்க கடிதத்தின் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் பெண்கள் வன்முறைகளை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக காரைதீவு பிரதேச செயலகத்திற்கு ரூபா 130,000 வழங்கப்பட்டிருந்தது. உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்தாது அப்பணம் மீண்டும் அந்த அமைச்சிற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ பலவீனம்

------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உஹன பிரதேச செயலகத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போது பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 68,084 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டை உரிய குறிக்கோள்களை அமுல்படுத்துவதற்காகப் பயன்படுத்தாது அந்நிதி ஏற்பாடு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உஹன பிரதேச செயலகத்தினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்ட வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்தல் கட்டணம், மணல் பிரயாணக் கட்டணம், மதுவரி உத்தரவுப் பத்திரக் கட்டணம் என்பனவாக ரூபா 270,612 கூட்டு மொத்த தொகை உரிய வருமானக் கணக்குகளுக்குச் செலவுவைக்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 328,690 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக 2013 திசெம்பர் 13 ஆந் திகதி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயலகத்தினால் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது ஒன்றரை ஆண்டு காலம் அந்த கெப் வாகனம் தனியார் கராஜில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பதியதலாவ பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர், 2015 சனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய மாதங்களில் அமைய நிவாரணம், ஊனமுற்றோர் உதவி என்பவற்றிற்காக எழுதப்பட்ட ரூபா 180,485 பெறுமதியான 22 காசோலைகளை ஒப்படைப்பதற்கு அல்லது தபாலில் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 03 மாதங்களை அண்மித்த காலமாக கையில் வைத்திருக்கப்பட்டன. அது சம்பந்தமாக மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | மிகை ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 08 | 08 | -- |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | 01 | -- |
| (iii) | இரண்டாம் மட்டம் | 48 | 57 | 09 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 13 | 31 | 18 |
| | மொத்தம் | 70 | 97 | 27 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஆரம்ப மட்டத்தில் 18 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்கள்.